இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 318 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 15 – திங்கள்கிழமை 29 ஜூன் 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 318 : Thiruvalluvar Year - 2057 - Aani 15 - Monday 29 June 2026 - Dak 8 Pages ₹ 5.00

## பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த

# ம.தி.மு.க. நிர்வாகிகள் ஏராளமானோர் கழகத்தில் இணைந்தனர்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!

**சென்னை, ஜூன் 29 -**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ம.தி.மு.க.வைச் சேர்ந்த சிவகங்கை, திருவள்ளூர், விருது நகர், திருப்பூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த முன்னாள் மாநில - மாவட்ட நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் உள்ளிட்ட 150க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர்.**

இது பற்றிய விபரம் வருமாறு;-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று (28.06.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், ம.தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் நிர்வாகிகளான சிவகங்கை மாவட்டச் செயலாளரும் – உயர்நிலைக்குழு உறுப்பினருமான புலவர் செ.செவந்தியப்பன், திருவள்ளூர் மாவட்டச் செயலாளரும் - உயர்நிலைக்குழு உறுப்பினருமான டி.ஆர்.ஆர்.செங்குட்டுவன், கொள்கை பரப்பு செயலாளரும் – உயர்நிலைக்குழு உறுப்பினருமான திருப்பரங்குன்றம் பொடா அழகுசுந்தரம், விருதுநகர் மாவட்டச் செயலாளர் ஆர்.எம்.எஸ். சேகர், மாநில தேர்தல் பணி துணைச் செயலாளர் தஞ்சாவூர் விடுதலைவேந்தன், தலைமைச் செயற்குகுழு முன்னாள் உறுப்பினர் டி.ஆர்.ஆர்.மதியழகன்;

திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாகிகளான மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் ஆர்.எஸ்.கோவிந்தராஜன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ம.ராஜகோபால், சாமளாபுரம் பேரூர்ச் செயலாளர் எஸ்.செல்வராஜ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளரும், பல்லடம் நகர்மன்ற துணைத் தலைவருமான திருமதி நர்மதா இளங்கோவன், பொதுக்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், சாமிநாதன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கார்த்திக், பல்லடம் நகர துணைச் செயலாளர் ஜெகநாதன், பல்லடம் நகர்மன்ற முன்னாள் உறுப்பினர் வெங்கடேஷ்;

மற்றும் முன்னாள் நிர்வாகிகளான மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் புதுக்கோட்டை சதாசிவம், மாநில மாணவர் அணி துணைச்செயலாளர்கள் சிவகாசி மு.செல்வராஜ் - திருப்பூர் ஆர்.எஸ்.கோவிந்தராஜன், நகரச் செயலாளர் எஸ்.கே.ரவிச்சந்திரன், ஆர்.எம்.எஸ். சேகர், விருதுநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி வழக்கறிஞர் பாரதமணி, மதுரை மாவட்ட பொறியாளர் அணி சி.எல்.ராஜா - சிவகங்கை மாவட்ட நிர்வாகிகளான மாவட்ட அவைத்தலைவர் எம்.ஜெயபிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர்களான என்.ராமச்சந்திரன், ஏ.சி.முத்து, பி.சதாசிவம், இளைஞர் அணி வி.அருள்செல்வம், பி.கந்தசாமி – திருவள்ளூ மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட பொறியாளர் அணி கே.ரகுராமகிருஷ்ணன், பொன்னேரி பேரூர்ச் செயலாளர் மதிவாணன், மோகன், ஞானவேல் – கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஆகாஷ்ராஜ் - அத்துடன் பொடா அழகுசுந்தரம் ஏற்பாட்டில் சென்னை அம்பேத்கார் சட்டப் பல்கலைக் கழக மாணவர்கள் ஏ.அன்பரசன் தலைமையில் 40 பேர் உள்ளிட்ட 150க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு எம்.எல்.ஏ., துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர், மகளிர் அணி தலைவர் விஜயா தாயன்பன், பல்லடம் முத்துரத்தினம், தாராபுரம் கவின்நாகராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று (28.06.2026) அண்ணா அறிவாலயத்தில் ம.தி.மு.க.வினர் ஏராளமானோர் கழகத்தில் இணைந்தனர். அதுபோது கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர், மகளிர் அணி தலைவர் விஜயா தாயன்பன், பல்லடம் முத்துரத்தினம், தாராபுரம் கவின்நாகராஜ் ஆகியோர் உடனிருந்தனர்

---

## பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்தியதுபோல் வீடியோ வெளியிட்ட

# த.வெ.க. அமைச்சரை பதவி நீக்கம் செய்யக் கோரி இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## கழக மாணவர் அணி சார்பில் மாவட்ட தலைநகரங்களில் நடைபெறுகிறது! தலைமைக் கழகம் அறிவிப்பு!

**சென்னை, ஜூன் 29 -**

**பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்தியது போல் வீடியோ வெளியிட்ட த.வெ.க. அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி கழக மாணவர் அணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் இன்று மாவட்ட தலைநகரங்களில் நடைபெறுகிறதென்று தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.**

இதுகுறித்து தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:–

இளைஞர்களையும் சமுதாயத்தையும் சீரழிக்கும் போதைப் பொருட்கள் பயன்பாட்டைத் தடுத்து நிறுத்துவதோடு, அதற்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது சமூகப் பொறுப்புள்ள ஒவ்வொருவரின் கடமை. ஆனால், ஆளும் த.வெ.க. அரசில் இடம் பெற்றுள்ள அமைச்சர்களின் செயல்பாடுகள் அவ்வாறானதாக இல்லை. குறிப்பாக, மனிதவள மேலாண்மைத் (Human Resources Management) துறை அமைச்சர் டி.சரத்குமார், போதைப் பொருளைப் பயன்படுத்துவது போன்ற வீடியோ ஒன்று, போதைப்பொருள் ஒழிப்பு நாளன்று வெளியாகி சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

அமைச்சரும் அதற்கு விளக்கமளிக்கிறேன் பேர்வழி என்று, த.வெ.க.வின் பாரம்பரியப்படி, குழந்தைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு அரசியல் செய்வதாகவே தோன்றுகிறது. அவர் போதைப் பொருள் பயன்படுத்தினரா இல்லையா என்று அவரைக் காக்க பட்டிமன்றம் நடத்துவதைவிட, பொதுவெளியில் போதைப் பொருட்களைப் பயன்படுத்துவது போல் வீடியோ எடுத்து, அதனை "Thug Life Moment என்று Reels–ஆக வெளியிட்டு தவறான செயலைச் செய்ய இளைஞர்களை ஊக்குவிக்கும் அவரது செயல் கடுமையாகக் கண்டிக்கத்தக்கது.

### மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

எனவே, இத்தகைய ஒருவர் அமைச்சரவையில் தொடர்வது, எவ்விதத்திலும் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு நன்மை தரக் கூடியது அல்ல என்பதால், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் டி.சரத்குமாரை உடனடியாகப் பதவிநீக்கம் செய்ய வலியுறுத்தி, தி.மு.க. மாணவர் அணிச் சார்பில் இன்று (29.6.2026 திங்கட்கிழமை) கழக மாவட்டத் தலைநகரங்களில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட – ஒன்றிய – நகர – பேரூர் கழக மாணவரணி நிர்வாகிகள் மற்றும் மாணவர்கள் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், **“பூமியில் இருக்குது மூனு பங்கு தண்ணிடா, தண்ணிய அடிப்பதில் தப்பு ஒன்னும் இல்லடா” “பத்தாது பாட்டில் நான் குடிக்க, அண்டால கொண்டா சியர்ஸ் அடிக்க”** போன்ற தத்துவப் பாடல்கள் மூலம் ரசிகக் கூட்டத்தை உருவாக்கிய முதலமைச்சர் அவர்களின் அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள், இன்னுமும் ரசிக மன நிலையிலேயே இருக்கின்றனர்.

அதிலும் அமைச்சர் ஜெகதீஸ்வரி அவர்களது கையில் முதலமைச்சர் விஜய் புகைப்பிடிப்பது போன்ற “டாட்டூ”–வைப் போட்டுக்கொண்டு, அவரது தத்துவப் பாடல்களை இளைஞர்களிடம் கொண்டு சேர்க்கும் பணியைச் செய்து கொண்டிருக்கிறார்.

இதனையெல்லாம் கண்டிக்க வேண்டிய முதலமைச்சரோ, இதையெல்லாம் ரசிக்கின்ற மன நிலையில் தேங்கி நிற்கிறார் என்பதை வேதனையோடு பதிவு செய்து, அமைச்சர்களின் இத்தகைய மாண்பற்ற போக்குகளை முதலமைச்சர் கண்டித்து இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என தி.மு.க. மாணவர் அணி வலியுறுத்துகிறது.

இவ்வாறு தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

---

# ரூ.2500 மகளிர் உரிமைத் தொகை குறித்து கேட்டதும் தெறித்து ஓடிய அமைச்சர்!

*விருதுநகர், ஜூன் 29 -*

*மகளிர் உரிமைத் தொகை குறித்து வாய் திறக்க மறுக்கிறார்கள் அமைச்சர்கள்.*

*மகளிர் உரிமைத் தொகை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு, மழுப்பலாக பதில் அளித்து விட்டு அமைச்சர் ஜெகதீஸ்வரி நழுவியது பொதுமக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.*

*நம்ம ஒண்ணு கேட்டா நம்மள அசத்துற மாதிரி பதில் சொல்லும் காமெடி கலாட்டாக்களை த.வெ.க. அமைச்சர்கள் அரங்கேற்றி வருகின்றனர்.*

*இந்த நிலையில் விருதுநகர் அருகே புல்லல்கோட்டையில் போலியோ சொட்டு மருந்து முகாமினை துவக்கி வைத்த அமைச்சர் ஜெகதீஸ்வரியிடம், 2500 ரூபாய் மகளிர் உரிமைத் தொகை எப்பொழுது வழங்கப்படும் என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.*

*இதற்கு தொண்டை சரியில்லை என பதிலளித்து விட்டு அமைச்சர் நழுவினார்.*

---

## குட்கா கடத்தலில் குற்றவாளிகளுக்கு ஆதரவாக பேசிய ஆடியோ!

# தொடர் சர்ச்சைகளில் சிக்கிவரும் த.வெ.க. எம்.எல்.ஏ. சரவணன்!

*தூத்துக்குடி, ஜூன் 29 -*

*தொடர் சர்ச்சைகளில் சிக்கிவரும் திருவைகுண்டம் த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் சரவணன் குற்றவாளிகளுக்கு ஆதரவாக பேசிய ஆடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.*

*தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் பகுதியில் த.வெ.க. கட்சியில் ஒன்றிய செயலாளராக இருப்பவர் குணசேகரன். இவர் ஆந்திராவில் இருந்து குட்கா உள்ளிட்ட புகையிலைப் பொருட்களை மொத்தமாக வாங்கி வந்து தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்வதாக கூறப்படுகிறது.*

*இந்நிலையில், அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தொலைபேசியில் த.வெ.க. திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் சரவணனை தொடர்பு கொண்டுள்ளார்.*

*அப்போது, குட்கா கடத்தலில் ஈடுபட்டுள்ள குணசேகரன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த இளைஞர் கோரி உள்ளார்.*

*ஆனால் கடைசிவரை சட்டமன்ற உறுப்பினர் சரவணன் மழுப்பலான பதிலையே தெரிவித்துள்ளார். தற்போது இந்த ஆடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.*